பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆடி 22உ (7—8—67) திங்கள் ★ வெளியூர்: ஆடி 23உ (8—8—67) செவ்வாய் [இதழ்: 46

ஆட்சிமொழி மசோதாவுக்கு ஏற்பட்டுள்ள கதி!

இந்தத் தொடர்க் கூட்டத்திலும் வரப்போவதில்லையாம்!

இருசாராரையும் திருப்திப்படுத்தும் வகையில் இல்லை என டில்லியின் சமாதானம்

புதுடில்லி, ஆக. 6—

நாடாளுமன்றத்தின் நடப்புத் தொடர்க் கூட்டத்தில் ஆட்சிமொழிச் சட்டத் திருத்த மசோதா வருவது உறுதியாகிவிட்டது என்று சில நாட்களுக்கு முன்புதான் செய்தி வந்தது; அதற்குள், 'இப்போது அந்த மசோதா வருவதற்கில்லை' என்ற செய்தி தரப்படுகிறது.

"உருவாக்கப்பட்டுள்ள மசோதாவை இந்தி பேசும் மாநிலங்களும் இந்தி பேசாத மாநிலங்களும் ஏற்க மறுத்துள்ளதே இதற்குக் காரணம்" என்று அறிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற நடப்புத் தொடர்க் கூட்டம் இத்திங்கள் 12-ம் நாளுடன் முடிந்துவிடுகிறது.

கால வரையின்றி இந்தி துணை ஆட்சி மொழியாக சட்டபூர்வமாக இருக்க இம்மசோதாவில் வகை செய்யப்பட்டிருப்பதே இந்திக்காரர்கள் இதனை எதிர்ப்பதற்கு முக்கிய காரணம்.

இன்னும் 10 அல்லது 15 ஆண்டுகளுக்கு மேல் ஆங்கிலம் நீடிக்கக்கூடாது என்றும், அதன் பிறகு இந்தியே இந்தியாவின் ஒரே ஆட்சி மொழியாக வேண்டும் என்றும், இந்தி மாநிலத்தவர் பிடிவாதம் பிடிக்கின்றனராம்.

இந்தி பேசாத பகுதியில் உள்ள மாநில அரசுகள், இந்த மசோதாவில் பல திருத்தங்கள் செய்யக் கோரியுள்ளன.

இரு சாராரையும் திருப்தி செய்யும் வகையில் மசோதாவை உருவாக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதால், 'நடப்புக் கூட்டத் தொடரில் மசோதாவைக கொண்டுவருவது இயலாத காரியம்' எனப் புகல் கூறி, டில்லி அரசு, இப்போதும் தள்ளிப்போட்டுவிட முடிவு செய்திருக்கிறதாம்.

ஊழியர் நலனை புறக்கணிக்காதீர்!

தொழிலதிபர்களுக்கு அமைச்சர் அறிவுறுத்தல்

சென்னை, ஆக. 5—

"தொழிலதிபர்கள் உற்பத்தித் திறனை அதிகப்படுத்த முயற்சி செய்கையில், திட்டமிடும் அளவை மறந்துவிடக் கூடாது; தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார மந்தத்தைச் சமாளிப்பதற்கு, நாட்டின் நலனிற்கும் உலகப் போக்குக்கும் தகுந்தவாறு உற்பத்தி முறையை மாற்றி அமைக்கவேண்டும்; தொழிலதிபர்கள் ஊழியர்களின் நலனை மறந்துவிடக் கூடாது"

என்று அமைச்சர் செ. மாதவன், சென்னை உற்பத்தித் திறன் குழு 8-வது ஆண்டுக் கூட்டத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

வெட்டுண்ட காங்கிரசு எம்.எல்.ஏ.

அமைச்சர்கள் மு. கருணாநிதி ஏ. கோவிந்தசாமி ஆறுதல்

நாகை, ஆக. 6—

சால் வெட்டப்பட்டு நாகை. மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் சட்டமன்றக் காங்கிரசு உறுப்பினர் பி. ஜெயராஜ் அவர்களை, இன்று பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களும், வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்களும் வந்து பார்த்து, ஆறுதல் கூறிச் சென்றனர்.

முதலில் திரு. கோவிந்தசாமியும், அடுத்து திரு. கருணாநிதியும் வந்து பார்த்துச் சென்றனர்.

அமைச்சர்களைக் கண்டதும் திரு. ஜெயராஜ் கண்கலங்கினார். தம் குடும்ப நிலை குறித்தும் கவலை தெரிவித்தார்.

'கவலைப்பட வேண்டாம்' என்றும், உடல்நிலையைக் கவனித்துக் கொள்ளுமாறும் அமைச்சர்கள் ஆறுதல் கூறினர்,

"குற்றவாளிகள்மீது நடவடிக்கை எடுத்து நீதி கிடைக்கச் செய்யப்படும்" என்று அமைச்சர் கருணாநிதி கூறினார்.

எலும்பு மருத்துவ நிபுணரான டாக்டர் நடராசனை சென்னையிலிருந்து அனுப்பிவைக்க ஏற்பாடு செல்வதாகவும் அமைச்சர் ஏ. கோவிந்தசாமி கூறினார்.

தஞ்சை மாவட்ட தி. மு. க. செயலாளர் மன்னை நாராயணசாமியும் உடன் சென்றிருந்தார்.

கடலங்குடி விவசாயிகள் தகராறு

தீர்த்துவைக்க அமைச்சர் நடவடிக்கை

மாயூரம், ஆக. 6—

குத்தாலம் அருகே உள்ள கடலங்குடி என்னும் ஊரில் கடந்த மூன்று வார காலமாக இருந்து வரும் விவசாயத் தொழிலாளர்கள் தகராற்றினைத் தீர்த்துவைக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவரை, வேளாண்மைத்துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி கேட்டுக்கொண்டுள்ளார். அமைச்சரும் இங்கேயே தங்கியுள்ளார்.

ஊதியப் பிரச்சினை குறித்து தகராறு ஏற்பட்டுள்ளது. விவசாயத் தொழிலாளர்கள் இரண்டு மரக்கால் நெல்லும், 50 காசும் கூலியாகக் கேட்கின்றனர். இதுவரை அவர்களுக்கு 1½ மரக்கால் நெல்லும் 25 காசும் கொடுக்கப்பட்டு வந்தது. வெளியிலிருந்து நடவுக்காக ஆட்களை அமர்த்துவது தடுக்கப்படுகிறது. 50 நாள் நாற்றுகள் 300 ஏக்கரில் வாடுகின்றன.

சட்டம்-ஒழுங்கு குலைந்துவிடவில்லை

ஐ. ஜி. தகவல்

சென்னை, ஆக. 6—

"தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு நிலைமை மோசமடையவில்லை; இங்குமங்கும் ஓரிரண்டு நிகழ்ச்சிகள் நடந்திருக்கலாம்; ஆனால், இதை வைத்துக் கொண்டு நிலைமை மோசமடைந்திருப்பதாக பொதுப்படையாகச் சொல்லிவிடமுடியாது"

என்று தலைமைக் காவல்துறை அதிகாரி அருள், செய்தியாளர்களிடம் கூறினார்.

காங்கிரசின் கால பலன் சரியில்லை!

எந்த நேரத்தில் எந்த மாநிலத்தில் ஆட்சி கவிழுமோ?

அடுத்து இராஜஸ்தான்—மைசூர் மாநிலங்களில் ஆபத்து நிலை

பெங்களூரிலிருந்து வெளியாகும் 'டெக்கான் ஹெரால்டு' ஆங்கில நாளிதழின் (5—8—67) 'மாநிலங்களைச் சுற்றிலும்' என்ற தலைப்பில் பின்வருமாறு கருத்தறிவிக்கப்பட்டுள்ளது:—

'பாதுகாப்பான கோட்டை' என்று கருதப்பட்டு வந்த மத்தியப் பிரதேச காங்கிரசு அமைச்சரவையே கவிழ்ந்துவிட்ட பிறகு மற்ற மாநிலங்களில் என்ன நிகழுமோ என்ற அச்சம் காங்கிரசுத் தலைவர்களைக் கலக்கிக் கொண்டிருக்கிறது! காங்கிரசுச் சட்டமன்ற உறுப்பினர்களிடையே எந்த நேரத்தில், 'சரண் சிங்'குகள் அல்லது 'கோவிந்த நாராயண சிங்'குகள் தோன்றிவிடுவார்களோ என்ற திகில் அவர்களை வாட்டிக் கொண்டிருக்கிறது!

மைசூர், குசராத் மாநிலங்களிலுள்ள நிலைமை காங்கிரசுக்காரர்கள் மகிழ்ச்சி கொள்ளத்தக்கதாக இல்லை. இந்த இரண்டு மாநிலங்களிலும், முறையே மைசூர்—பரோடா மகாராஜாக்களுக்கு நல்ல செல்வாக்கு இருக்கிறது. "அரசர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் மானியத் தொகையை நிறுத்திவிடும் தீர்மானத்தை மத்திய அரசு நிறைவேற்றுமேயானால் இந்த இரு மாநிலங்களிலும் காங்கிரசு அமைச்சரவைகள் கவிழ்ந்துவிடும்" என்று பார்வையாளர்கள் கருதுகிறார்கள்.

காஷ்மீர் காங்கிரசுக்காரர்களிடையே வளர்ந்துவரும பூசல்களும் டில்லியில் உள்ளவர்களுக்குத் தலைவலி அளிக்கத் தொடங்கியுள்ளதாகத் தெரிகிறது; 'அமைச்சரவையை ஒரு மாதத்திற்குள்ளதாகத் திருத்தியமைக்க வேண்டும் என்றும் இல்லாவிட்டால் தாம் அதை எதிர்த்து 'மக்கள் எதிர்ப்புக் கிளர்ச்சி' ஒன்றைத் துவக்கப் போவதாகவும் மாநில காங்கிரசுத் தலைவர் மீர் காசிம், முதலமைச்சர் சாதிக்குக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். காங்கிரசிலுள்ள முன்னணி ஊழியர்கள் பலரின் ஆதரவு அவருக்கு இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில் டில்லி அமைச்சரும், முன்னாள் காஷ்மீர் மன்னருமான டாக்டர் கரன் சிங்குக்கும்—காஷ்மீர் முதலமைச்சர் 'சாதிக்குக்கும் இடையில் மாநிலத்தைப் புதிய அடிப்படையில் திருத்தியமைப்பது பற்றிப் பெருத்த கருத்து வேறுபாடுகள் தோன்றி, பேச்சுவார்த்தைகள் நின்றுபோகும் அளவிற்கு முற்றியுள்ளதாகக் கூறப்படுகிறது.

மொத்தத்தில் நான்காவது பொதுத் தேர்தல்களுக்குப் பிறகு காங்கிரசின் 'நட்சத்திரங்கள்' நல்ல நிலைமையில் இல்லை என்றே கொள்ளவேண்டியிருக்கிறது!

நலத்துறை திட்டங்களில் அரசு காட்டும் அக்கறை

அமைச்சர் சாதிக்பாட்சா விளக்கம்

"அவரிடமிருந்து மக்கள் அதிகம் எதிர்பார்க்கிறார்கள் என்பது உண்மைதான்; ஆனால், நிதிப் பற்றுக்குறை காரணமாகப் பெருந் திட்டங்கள் அனைத்தையும் துரிதமாக மேற்கொள்ள முடியாதிருக்கிறது. நலத்துறைத் திட்டங்களுக்கு முடிந்த அளவு நிதி ஒதுக்க முதலமைச்சர் ஒத்துக்கொண்டிருக்கிறார்; ஆகவே, அரசு கூடுமான அளவு நிதி ஒதுக்கும்"

என்று நலத்துறை அமைச்சர் சாதிக் பாட்சா, நெல்லை நகராட்சி மன்ற வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினார்.

மருத்துவ விடுதிகள் பற்றிய முறையீடு

விசாரிக்கத் தனிக் குழு

சங்கரன்கோயில், ஆக. 3—

அரசு மருத்துவ விடுதிகளில் மருந்துகள் போதுமான அளவு இல்லை என்ற முறையிடு பற்றி விசாரித்தறிய 3 பேர் கொண்ட குழு ஒன்றை அரசு நியமித்துள்ளதாக நலத்துறை அமைச்சர் சாதிக்பாட்சா கூறினார்.

நகர பஸ் கட்டணத்தில் மாறுதல்

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஊக்குவிப்பு போனஸ்

அண்ணா பிறந்த நாள்முதல் செயல்படுத்தத் திட்டம்

சென்னை, ஆக. 5—

"சென்னை நகரில் ஓடும் அரசு பஸ்களில் கட்டணங்களை மாற்றியமைப்பதற்கான திட்டம் இப்போது தயாராக இருக்கிறது; செப்டம்பர் திங்கள் முதல் வாரத்தில், புதிய பஸ் கட்டணங்கள் அறிவிக்கப்படும்; செப்டம்பர் மாதம் 15-ந்தேதியிலிருந்து—முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் 59-வது பிறந்த நாளன்று—செயலுக்கு வரும்"

என, போக்குவரத்துத்துறை அமைச்சர் மு. கருணாநிதி, செய்தியாளர்களிடம் கூறினார்.

"வசூல் அடிப்படையில் போக்குவரத்துத்துறை தொழிலாளர்களுக்கு ஊக்குவிப்பு போனஸ் அளிப்பதற்கான திட்டமும் செப்டம்பர் 15-ந்தேதி செயலுக்கு வரும்" எனத் தெரிவித்தார்.

"நகராட்சிகள் பஸ் போக்குவரத்து நடத்த அனுமதிக்கப்படும் உத்தேசம் எதுவும் அரசுக்கு இல்லை" என்றார் அமைச்சர்.

வாஷிங்டன், ஆக. 6—

அணு ஆயுத உற்பத்தித் துறையில் சீனா விரைவாக முன்னேறிக் கொண்டிருப்பதால், ஏவுகணைகளை எதிர்ப்பதற்குப் பலமான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்ய வேண்டுமென செனட் மாளிகைக் குழு அமெரிக்க அரசை வற்புறுத்தியுள்ளது.

'நம் நாடு'
நாளைய இதழில்
★
கருத் தடையும் கருத்துத் தடையும்
—உள்ளும் புறமும்

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., பி.எல்.

திருவள்ளுவராண்டு 1998 ஆடி 22 (7—8—67) திங்கள்

இதையும் பழிப்பதா?

சென்னை நகரத்தை அடைகின்ற பஸ் தடங்களையும், 75 மைலுக்கு மேற்பட்ட பஸ் தடங்களையும் படிப்படியாகத் தானே ஏற்றுக்கொண்டு, அத்தடங்களில் அரசாங்கப் பஸ்களை விடவேண்டும் என்பது தமிழக அரசாங்கத்தின் முடிவு. இம்முடிவின்படி, எழுபத்தைந்து மைலுக்கு மேற்பட்டிருக்கின்ற சென்னை—ஆரணி பஸ் தடத்தில்—இதுவரை சென்றுகொண்டிருந்த தனியார் ஒருவரின் பஸ் விடும் அனுமதி காலாவதி ஆகிவிட்டதனால்—பஸ் விட அரசாங்கம் முனைந்திருக்கிறது.

இதுபோன்றே, காஞ்சீபுரத்துக்கும்—விழுப்புரத்துக்கும் பஸ் விடத் தனியார் ஒருவருக்குத் தரப்பட்டிருந்த அனுமதி, இத்திங்கள் 17-ந் தேதியுடன் காலாவதியாகிவிடுகிறது. இந்தத் தடத்திலும், பதினெட்டாந் தேதியிலிருந்து பஸ் விட அரசாங்கம் முடிவு கட்டி இருக்கிறது. இம்முறையில், பல பஸ் தடங்களில் பஸ் விடத் தனிநபர்களுக்குத் தரப்பட்டிருக்கின்ற அனுமதி காலாவதியானதும், அத்தடங்களில் பஸ் விடுகின்ற பொறுப்பை ஏற்றுக்கொள்ளவும் அரசாங்கம் முடிவு கட்டியுள்ளது.

இதுதான், தமிழக அரசாங்கத்தின்—பஸ் போக்குவரத்தைத் தேசியமயமாக்கும் துறையில்—கையாள வரையறை செய்யப்பட்டுள்ள ஏற்பாடாகும். இவ்வேற்பாட்டின்படி, முதல் முதலாக சென்னை—ஆரணி பஸ் தடத்தில், அரசாங்கம் பஸ் விட்டிருக்கிறது. இத்துவக்க விழாவை, முதலமைச்சர் அண்ணா அவர்கள் துவங்கி வைத்திருக்கின்றார்.

பஸ் போக்குவரத்தைப் படிப்படியாகத் தேசியமயமாக்க வேண்டும் என்ற தனது குறிக்கோளை, மேலே குறித்திருக்கின்ற ஏற்பாட்டின்படி, தமிழக அரசாங்கம் நிறைவேற்றும் என்பது உறுதி. இக்குறிக்கோளிலும், இக்குறிக்கோளை நிறைவேற்ற அரசாங்கம் வகுத்துள்ள செயல்முறை ஏற்பாட்டிலும், குறை காண்பதற்கு ஏதுமில்லை.

சென்னைக்கும்—ஆரணிக்கும் முதன் முதலாக அரசாங்க பஸ் விடப்பட்ட துவக்க விழாவில், எவரிடமிருந்து இந்தப் பஸ் தடத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதோ அவரும், தமிழகத்தில் குறிப்பிடத்தகுந்த பஸ் முதலாளியான பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்களும் கலந்துகொண்டு, அரசாங்கத்தின் பஸ் தேசியமயக் கொள்கையை மகிழ்ச்சியுடன் ஆதரித்து வரவேற்று உள்ளனர். அவர்கள் இருவரும், காங்கிரசுக் கட்சியில் குறிப்பிடத்தக்கவர்கள்.

விழாவில் இவர்கள் பங்குகொண்டதன் காரணமாகவோ, அல்லது தம் இயல்புப்படியோ, அல்லது இரண்டின் விளைவாகவோ, கழக ஆட்சியின் பஸ் தேசியமயக் கொள்கையைக் கண்டிக்கவும், ஆடசியைப் பழிக்கவும், ஒழலூர் அழகேசனார் முன்வந்திருக்கின்றார். தமக்கு விருப்பமானதும் தமது அறிவாற்றலுக்கு ஏற்றதுமான திருப்பணியை, அழகேசனார் மேற்கொண்டிருக்கிறார் என்பதைத் தவிர, அவர் போக்கில் வியப்படைவதற்கு எதுவுமில்லை.

இன்றையத் தமிழக அரசின் பஸ் தேசியமய ஏற்பாட்டைக் கண்டிக்கத் துணிந்துள்ள அழகேசனார் அவர்கள், 'பெரிய பஸ் முதலாளிகளுக்குச் சலுகை காட்டுவதையும், சிறிய முதலாளிகளுக்குத் தீமை விளைவிப்பதையும் உள்ளடக்கமாகக் கொண்டே இன்றைய அரசாங்கத்தின் தேசியமயச் செயல்முறை ஏற்பாடு இருக்கிறது' எனக் குறைபட்டுக் கொண்டிருக்கின்றார். இதற்கு ஒரு விளக்கத்தையும் தந்திருக்கிறார் :—

"பஸ் போக்குவரத்தைத் தேசியமயமாக்குவது என்றால், ஒவ்வொரு பஸ் அதிபருக்கும் எத்தனை பஸ் ரூட்டுகள் இருக்கின்றன என்பதைக் கணக்கில் எடுத்து, சிறிய பஸ் அதிபர்களுக்கு முதலில் விதிவிலக்கு அளித்து, பெரிய பஸ் அதிபர்கள் நடத்தும் போக்குவரத்தைத் தேசியமயமாக்கவேண்டும்" என்றும்—

"75 மைல்களுக்குமேல் உள்ள பஸ் போக்குவரத்தைத் தேசியமயமாக்கப்போவதாக அறிவித்துள்ளனர்; இதன்படி, தமிழகத்திலுள்ள ஒரு பெரிய பஸ் அதிபருக்கு 17 பஸ் ரூட்டுகள்தான் பாதிக்கப்படுகின்றன; ஆனால் 5 ரூட்டுகள் வைத்திருக்கின்ற ஒரு பஸ் அதிபருக்கு 3 ரூட்டுகள் பாதிக்கின்றன" என்றும்—

"பெரும்பாலும் சிறிய பஸ் அதிபர்கள்தான் பாதிக்கப்படுகின்றனர். இதில் என்ன சோஷலிசம் இருக்கிறது? முதலாளிகளைப் பாதுகாக்கும் சோஷலிசம் இருக்கிறது" என்றும் கூறியிருக்கின்றார்.

'பஸ் போக்குவரத்தைத் தேசியமயமாக்க வேண்டும்' என்ற இலட்சியத்தை, எப்படித் தி. மு. கழகம் குறிக்கோளாக்கிக்கொண்டிருக்கிறதோ, அதேபோன்றுதான் அந்த இலட்சியத்தைக் காங்கிரசுக் கட்சியும் கொண்டிருக்கிறது—என இதற்குமுன் பேசப்பட்டு வந்திருப்பது போலவே இப்பொழுதும் பேசப்பட்டு வருகிறது; ஆனால், இதுவரை காங்கிரசுக் கட்சி, அந்த தேசியமயமாக்கும் கொள்கையை நிறைவேற்றவில்லை.

'பஸ் போக்குவரத்தைத் தேசியமயமாக்க வேண்டும்' எனச் சட்டமன்றத்தில் ஏற்கனவே பலமுறை, எதிர்க் கட்சிகள் வற்புறுத்தியுள்ளன. அதற்கு, அன்றிருந்த காங்கிரசு ஆட்சி என்ன விளக்கம் தந்தது?

"எதிர்க் கட்சியினர் வற்புறுத்துவதுபோல், பஸ் போக்குவரத்து அனைத்தையும் ஏற்றுக்கொள்ள அரசாங்கத்திடம் போதிய நிதி வசதி இல்லை; அப்படியே நிதி வசதி இருந்திட்டாலும், பஸ் போக்குவரத்தை இலாபகரமாக அரசாங்கத்தால் நடத்த முடியவில்லை; இதற்கு எடுத்துக்காட்டாக, நகர பஸ் போக்குவரத்தில் ஏற்பட்டுவருகின்ற இழப்பே போதியதாகும்" என்றுதான் இதுவரை—எண்ணத் தொலையாத முறை—ஏற்கனவே இருந்த காங்கிரசு ஆட்சி கூறிவந்தது. இந்த விளக்கத்தை, தமிழகச் சட்டமன்றம், இன்றும்கூட எதிரொலித்துக்கொண்டுதான் இருக்கிறது.

பஸ் போக்குவரத்தைத் தேசியமயமாக்குவதில், ஏற்கனவே காங்கிரசு அரசாங்கம் நாணயமாக நடந்துகொள்ளவில்லை என்பதும், செயல்படுத்த வேண்டும் என்ற கருத்தில்லாமலே தேசியமயக் கொள்கையைக் காங்கிரசு ஆட்சி திரும்பத் திரும்பக் கூறிவந்திருக்கிறது என்பதும், நிலைநாட்டப்பட்டுள்ள உண்மையாகும். இதை, ஒழலூர் அழகேசனார் அவர்களாலும் மறுக்க முடியாது.

தமிழகத்தில் பல பகுதிகளிலும் சென்றுகொண்டிருக்கின்ற பஸ் போக்குவரத்து முழுவதையும் அரசாங்க உடைமையாக்குவது, இந்தச் சூழ்நிலையில் எந்த அரசாங்கத்தாலும் இயலாது; அதற்குத் தேவைப்படும் நிதி வசதி, எந்த அரசாங்கத்திடமும் இருக்க முடியாது. தேவைப்படும் மொத்த நிதியை, நினைத்த மாத்திரத்தில் திரட்டிவிடவும் அரசாங்கத்தால் முடியாது.

தமிழகப் பஸ் போக்குவரத்து அனைத்தையும் ஒரே நாளில் எடுத்துக்கொள்வதற்குத் தேவைப்படும் நிதி வசதி அரசாங்கத்திடம் இருப்பதாகவே வைத்துக்கொள்வோம். அந்த நிதி வசதியைக் கொண்டு, தமிழகமெங்கும் ஓடிக்கொண்டிருக்கின்ற தனியார் துறை பஸ்கள் அனைத்தையும், அரசாங்கம் உடனடியாகக் கொள்முதல் செய்வதாகவே வைத்துக்கொள்வோம்.

இவ்விரண்டும் மட்டும் போதுமா—அரசாங்கப் பஸ் போக்குவரத்து, இலாபம் தரத்தக்க வகையில் செம்மையாக நடைபெறுவதற்கு? அறிவிலியும் கூறுன்—'போதும்' என்று!

அதற்கு வேண்டிய அளவுக்கு நிர்வாக இயந்திரத்தை, சீரான - செம்மையான முறையில் உருவாக்கியாக வேண்டும். ஒரே நாளில் முடியக்கூடியதா, இது?

—ஈா. க.

இட மாற்றமா? மனமாற்றமா?

உள்ளும் புறமும்

சட்டமன்றங்களில் கட்சி மாறுவது பற்றிச் சில நாட்களுக்கு முன்னர், தலைமையமைச்சர் இந்திரா மீண்டும் புதுடில்லி பத்திரிகையாளர் சங்கக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

மத்தியப் பிரதேசத்தில் முப்பதுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் எதிர்க் கட்சி வரிசைக்குச் சென்றதால், மிஸ்ரா அமைச்சரவை பதவி விலக நேர்ந்தது பற்றித் துவங்கிய பேச்சுவார்த்தை, 'இதுபோன்று இடம் மாறும் பழக்கம், எந்த அளவுக்குச் சரியானது' என்று பொதுப்படையாக ஆராயும் வரையில் சென்றிருக்கிறது!

உத்தரப்பிரதேசம்—
அரியானா—
மத்தியப்பிரதேசம்—

என்று மொத்த எண்ணிக்கையில் பெரும்பான்மை குறையும் அளவுக்கு மாநிலங்களில் காங்கிரசு அமைச்சரவைகள் பதவி இழக்க நேரிட்டுவருவது-மேலிடத்தில் உள்ளவர்களுக்கு—சனநாயகத்தில் உள்ள இந்த இயற்கைக் குறைபாட்டினை நோக்க வைத்திருக்கிறது!

உறுப்பினர்கள் இடம் மாறுவது தங்களுக்குச் சாதகமாக இருக்கின்ற வரையில், காங்கிரசுத் தரப்பிலிருந்து எத்தகைய சனநாயகக் கண்ணோட்டமும் தென்படவில்லை!

கட்சி மாற்றம் தங்கள் ஆட்சிக்கு வேட்டு வைக்கிறது என்ற நிலை பிறக்கும்போது மட்டும், பிரச்சினையை பரந்த மனப்பான்மையுடன்—சனநாயக அடிப்படையில் ஆராய்ந்து,குற்றங்கள்--குறைகள் கண்டுபிடிக்கின்றனர்!

நூல் இழையில் பெரும்பான்மையை ஒட்டவைத்துக் கொண்டிருக்கும் ஓரிரு காங்கிரசு அமைச்சரவைகளை மனதில் வைத்துக்கொண்டு, காங்கிரசு மேலிடம், அண்மையில் தீர்மானம் போட்டது; அதன்படி, 'மாநில சட்டமன்றக் கட்சிகள், 'வேறு கட்சிகளிலிருந்து வரும் உறுப்பினர்கட்கு இடம் தந்து வரவேற்கலாம்' என்ற அனுமதி வழங்கப்பட்டது!

'ஆனல், 'மத்தியப் பிரதேசத்தின் நிலைமை தலைகீழாக இருக்கிறது' என்றவுடன், 'பொதுப் பணம் எவ்வளவு செலவானலும் பரவாயில்லை; சனநாயகத்தில் கொள்கை—நம்பிக்கைதான் முக்கியம்; எனவே, மறுதேர்தல் அவசியம்' என்று இந்திரா—எல்லாம் முடிந்துவிட்ட நிலையிலும்—மற்றெரு முறை, 'சொந்தக் கருத்து' என்ற பெயரில் தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளார்.

"மறு தேர்தல் நடத்துவது கூடாது; மிஸ்ரா அதற்கு யோசனை கூறவும் கூடாது" என்ற காமராசரின் கருத்துக்கு மீண்டும் ஒருமுறை, தனது தனிப்பட்ட எதிர்ப்பைக் காட்டவேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்திரா, பத்திரிகையாளர் சங்கக் கூட்டத்தில் பேசியிருக்க வேண்டும்; என்ருலும், 'தலைமையமைச்சர்' என்ற முறையில், அவர் இதுபற்றித் தெரிவித்துள்ள கருத்துக்கள், அரசியல் முக்கியத்துவம் பெற்றதாக இருக்கின்றன!

ஓரிரு உறுப்பினர்கள் இடம் மாறுவது நடக்கக்கூடியது; அதிகமாகத் தவறும் காண முடியாத நிகழ்ச்சி; ஆனல், 'ஒரே நேரத்தில் நிறைந்த எண்ணிக்கையினர் கட்சி மாறுகிறார்கள் என்ருல், அப்போது மறுதேர்தல் அவசியமாகிறது' என்று கூறியிருக்கிறார் இந்திரா!

சட்டமன்றங்களில் இடமாற்றம் நிகழ்வது, 'இயற்கையான மனமாற்றத்தினுல்தான்' என்ற நிலை இருக்கும்வரையில், சனநாயக அமைப்புக்கு எந்தவித ஆபத்தும் இருக்க முடியாது!

இடமாற்றம், பலவந்தத்தினுலோ அல்லது கட்சித் தலைமையின்மீது கொண்டுள்ள தனிப்பட்ட வெறுப்புக்களாலோ நடைபெறும்போதுதான், சட்டமன்றங்களில் அவலங்கள் நிகழ ஆரம்பிக்கின்றன!

குறிப்பாக, பெரும்பான்மையை மயிரிழையில் ஒட்டவைத்துக் கொண்டிருக்கும் ஆளும் கட்சிகளைக் கொண்ட சட்டமன்றங்களில், 'இடமாற்றம்' என்ற தூக்குக் கயிறு எந்த நேரமும் தொங்கிக் கொண்டேதான் இருக்கும்! இது ஓரளவுக்குத் தவிர்க்க முடியாத—ஆனல் விறுவிறுப்பான அம்சமாகும்!

1967-வரை பல முக்கியச் சந்தர்ப்பங்களில் சட்டமன்றங்களில் கட்சி மாறும் பழக்கத்தைப் பதவி ஆசை காட்டி - சிறப்புச் சலுகைகள் தந்து வளர்ந்த காங்கிரசு, 1967-க்குப் பின்னர்—தாங்கள் துவக்கிவைத்த தகாத காரியம், தங்களுக்கே தீங்காக வருகிறது என்ற நிலை வந்தவுடனவது—சனநாயகத்தைப் பற்றிப் பரந்த அக்கறை கொண்டிருப்பது பாராட்டுக்குரியதுதான்!

ஆனல் மத்தியப் பிரதேச விவகாரத்தில், காமராசருக்கு எதிராகத் தனது கருத்தை வலியுறுத்த விரும்பிய இந்திரா, அதையே பொதுவான யோசனையாகவும் சிபாரிசு செய்திருப்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதாக அமையவில்லை!

சட்டமன்றத்தில் இடம் மாறும் உறுப்பினர்களைச் சட்டம் போட்டுத் தடுத்துவிட முயலுவதோ அல்லது அதே முறை அதிக எண்ணிக்கையான பேர்களால் கடைபிடிக்கப்படும்போது மறு தேர்தலே நடத்த வேண்டுமெனப் புதிய வழி வகுப்பதோ, நோக்கத்தில் வேண்டுமானுல் சனநாயகத்துக்குச் சாதகமான எண்ணமாக இருக்கலாம்; ஆனல், நடைமுறையில் சிக்கல்களைக் கொடுப்பதாகவே அமையும்!

ஆளும் கட்சியைத் திண்டாட்டத்தில் விடவேண்டுமெனத் தேவைப்பட்ட எண்ணிக்கையினர் முடிவு செய்துவிட்டார்களென்ருல், 'அய்யோ! நமது தனிப்பட்ட செயல், மாநிலத்தின் மறு தேர்தலுக்கே அல்லவா வழிகோலுகிறது?' என்ற நோவழிப் பாதையில் அவர்களைச் சிந்திக்க வைக்காது!

மாநிலச் சட்டமன்றங்களில் இதுவரையில் நடைபெற்றிருக்கும் கட்சி மாற்றங்களை ஒப்பிட்டு நோக்கினல், அவைகளில் கொள்கை அடிப்படையில் அமைந்தது ஏறக்குறைய ஏதுமே இல்லை என்று கூறலாம்.

தலைமையின்மீது வெறுப்பு—எதிர்ப்புறத்தில் காட்டப்படும் பதவி ஆசை — வற்புறுத்தல்கள் — நிர்ப்பந்தங்கள் போன்ற காரணங்களுக்காகத்தான் உறுப்பினர்கள் இடம் மாறுகிறார்கள்!

எண்ணிக்கையில் குறைவாக இருந்து ஆட்சி மாற்றத்துக்கு இடம் அளிக்காதபோது இது சுவையான நிகழ்ச்சியாகவும், அமைச்சரவையே மாறுகிற நிலை வருகிறபோது அதிர்ச்சியும் பரபரப்பும் நிறைந்த சம்பவமாகவும் மாறி அனைவராலும் பேசப்படும் நிலைக்கு வருகிறது.

உள்ளபடியே கட்சியின் கொள்கைகள்—போக்குகள் பிடிக்காத உறுப்பினர்கள், தங்கள் தங்கள் அமைப்பில் இருந்தபடியே சட்டமன்றங்களில் எதிர்த்து வாக்களிக்கும் ஓர் உரிமையும் அவர்களுக்கு இருக்கிறது; அதை, எவ்விதச் சட்டத்தினுலும் தடுக்கமுடியாது. இத்தகைய ஒரு முறை

(4-ம் பக்கம் பார்க்க)

உற்பத்திப் பெருக்கத்திற்குப் பதில் விலைவாசிதான் உயர்ந்தது!

மூன்றும் திட்டத்தின் குறியளவை எட்ட முடியவில்லை

கையாலாகாததற்கு அரசு கூறும் 'சமாதானம்'

புதுடில்லி, ஆக. 7—
மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் உணவு உற்பத்திக் குறியளவு நிறைவேருததற்கு என்ன காரணம் என்பது பற்றிய ஆய்வுக் குறிப்பு ஒன்று நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.

பருவநிலைக் கோளாறு—விரிவாகத்திட்டமிடத்தவறியது—கடன் வசதியின்மை — அரசின் பல்வேறு துறைகள் இணக்கமாக வேலை செய்யாமல் தலைக்குத் தலை விருப்பம்போல் நடந்து கொண்டது— ஆகியவையே காரணங்கள் என அதில் கூறப்பட்டுள்ளது.

மூன்றும் திட்டத்தின் வேளாண்மை உற்பத்திப்பெருக்க குறியளவு 5.4 சதவிகிதமாகும்; ஆனல் ஏற்பட்ட பெருக்கமோ 2.8 சதவிகிதம் தான்!

கைத்தொழில் துறையில் முதல் நான்கு ஆண்டுகளில் சராசரி உற்பத்திப் பெருக்கம் 7.8 சதவிகிதமாயிருந்தது; ஆனல் திட்ட இலக்கு 11 சதவிகிதமாகும்.

விலைவாசியைப் பொறுத்து மொத்த விலை குறியீட்டெண் 130-லிருந்து 150 ஆக உயர்ந்தது.

இந்த உயர்வு, 1963 மார்ச்சுக்கும்—1965 மார்ச்சுக்கும் இடையிலானதாகும். உணவுத் தானியப் பற்றுக்குறை நிலையே இதற்குக் காரணம்.

டில்லி அமைச்சர்கட்கு ஆகும் அதிகச் செலவு

குறைக்கும் நோக்கம் ஆய்வில் இல்லையாம்

புதுடில்லி, ஆக. 7—
"மத்திய அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் ஆகிய அனைவருக்கும் ஆண்டுதோறும் ரூ. 22,23,264 செலவிடப்படுகிறது"

என்று, உள்துறை அமைச்சர் சவான், நாடாளுமன்ற மேலவையில் கூறினர்.

ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் மேலும் அளித்த விவரமாவது:—

"காபினட் மதிப்புள்ள அமைச்சர்களுக்கு ஊதியம், கட்டிட வாடகை, மின்சாரம், தண்ணீர் கட்டணங்கள், நாற்காலிகள், மேசைகள், மின்சாரச் சாதனங்கள், விருந்துச் செலவு ஆகியவற்றுக்காக ரூ. 9,67,176 செலவாகிறது.

துணை அமைச்சர்களுக்கு ரூ. 7,74,760-ம் உதவி அமைச்சர்களுக்கு ரூ. 4,81,320-ம் செலவாகிறது.

இந்தச் செலவில் அமைச்சர்களுக்கும் உதவி அமைச்சர்களுக்கும் அளிக்கப்படும் பயணப்படி—அரசு கார் உபயோகிப்பதால் ஏற்படும் செலவு—ஊழியர்கள் செலவு—மருத்துவ வசதிகளுக்கான செலவு ஆகியவை அடங்காது.

"காபினட் மதிப்புள்ள அமைச்சர்களுக்கு ஊதியம்—கட்டிட வாடகை—மின்சாரக் கட்டணம் நாற்காலி, மேசைகளுக்கு வாடகை ஆகியவற்றிற்காக மாதந்தோறும் ரூ. 4,242 செலவாகிறது.

"இந்தச் செலவுகளில் எதனையும் குறைத்துக்கொள்ளும் எண்ணம் எதுவும் ஆய்வில் இல்லை."

கருவிகள் தயாரிப்புத் தொழிற்பேட்டைக்கு அனுமதி

சென்னை, ஆக. 7—
நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், அடையாற்றில் கருவிகள் உற்பத்தித் தொழிலுக்காக ஒரு தொழிற்பேட்டை ஏற்படுத்தும் திட்டத்தைத் தமிழக அரசு அனுமதித்துள்ளது.

இதற்காக ரூ. 15,06,000 மூலதனச் செலவுக்கும், ரூ. 1,12,000 நடைமுதல் செலவுக்கும் அனுமதி வழங்கியுள்ளது.

ம. பி. அமைச்சரவை--சிக்கன நடவடிக்கை

ஊதியத்தைக் குறைத்துக் கொள்ளுகின்றனர் அமைச்சர்கள்

போபால், ஆக. 7—
மத்தியப் பிரதேசத்தில் புதிதாக அமைந்திருக்கும் சம்யுக்த விதாயக் தளத்தின் அமைச்சரவை, அமைச்சர்களின் ஊதியத்தைக் குறைத்துக்கொள்வதாக முடிவு செய்தது.

ஒவ்வொரு அமைச்சரும் தம் சொத்துக்களையும், பொறுப்புக்களையும் அறிவிக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

காபினட் மதிப்புள்ள அமைச்சர்கள் ரூ. 100-ம், துணை அமைச்சர்கள் ரூ. 70-ம், உதவி அமைச்சர்கள் ரூ. 50-ம் தங்கள் ஊதியத்தில் குறைத்துப் பெற்றுக்கொள்வர்.

இதுவரை அவர்களின் ஊதியம்: 'காபினட்' அமைச்சர் ரூ. 1000; துணை அமைச்சர் ரூ. 850; உதவி அமைச்சர் ரூ. 750.

இதுவரை அமைச்சர்களின் மாளிகைகளுக்கு ஏற்பட்டுவந்த பெரும் செலவைக் குறைத்து சிக்கன நடவடிக்கைக்கு வழிவகைகள் கூறுவதற்கென ஒரு குழு ஏற்படுத்துவது அவசியம் எனக் கருதப்பட்டது.

கட்டணமின்றி மின்சாரம், தண்ணீர் பெறுதலையும், அரசுச் செலவிலேயே தோட்டக்காரர்கள், துப்புரவாளர்கள் முதலிய பல வேலைக்காரர்களை வைத்துக்கொள்வது போன்ற வசதிகளையும் நீக்கி அமைச்சர்களின் படித் தொகையை அதிகரிக்கும் எண்ணத்தை அரசு ஆய்வு செய்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

'சட்டம்--அமைதி சீர்குலையவில்லை'

தமிழ்நாடு காங்கிரசு கூற்றுக்கு போலீசு கமிஷனர் மறுப்பு

சென்னை, ஆக. 7—
"சென்னை நகரில் சட்டம்—அமைதி நிலைமை சீர்குலைந்து கொண்டிருக்கிறது" என்று தமிழ்நாடு காங்கிரசு நிர்வாகக் குழு கூறியதை, நகரப் போலீசு கமிஷனர் சிங்காரவேலு மறுத்துக் கூறியதாவது:—

"திட்டவட்டமான புகார்கள் கொடுக்கப்பட்டபோதெல்லால் போலீசார் நடவடிக்கை எடுத்திருக்கிருர்கள்.

"சில புகார்களைத் தொடர்ந்து குறிப்பாக மயிலாப்பூர் பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன; இங்கெல்லாம் இரவு நேரங்களில் போலீசார், மோட்டார் வான்களில் 'ரோந்து' சுற்றிக் கொண்டிருக்கிருர்கள்.

"மயிலாப்பூரிலிருந்து சில புகார்கள் வந்திருப்பது உண்மையே, அதனல், சட்டம்—அமைதி நிலைமை சீர்குலைந்துவிட்டது என்று கூறுவது, அர்த்தமற்றது"

வாக்குறுதிகளைக் காங்கிரசு நிறைவேற்ருததன் எதிரொலி!

காபூல், ஆக. 7—
"இந்தியாவில் காங்கிரசுத் தலைவர்களிடையே காணப்பட்ட பணத்தாசையும் பதவி மோகமும்தான் காங்கிரசு செல்வாக்கு இழந்ததற்குக் காரணமாகும்.

"மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை காங்கிரசு நிறைவேற்றவில்லை!

"ஒவ்வொருவருக்கும் உணவு—குடியிருப்பு — துணிமணிகள் — கல்வி வசதிகளாவது அளிக்கப்படும் என்று ஏழை மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளையும் அவர்கள் மறந்துவிட்டனர்!

"இந்தியாவில் பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகிவிட்டனர்! ஏழைகள் மேலும் ஏழைகளாகிவிட்டனர்!

"மக்களிடை 'நிலவிவரும் வறுமை நிக்கப்படாவிட்டால் இந்தியாவின் நிலைமை மோசமாகிவிடும்!"

--கான் அப்துல் கபார்கான்

ரூ. 3-கோடி பெறுமான உற்பத்தி முடக்கம்

அரசுத் தொழிற்சாலையின் அவலநிலை--தவறு எங்கே?

ஐதராபாத், ஆக. 7—
"அரசுக்குச் சொந்தமான இந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் தொழிற்சாலையில் உற்பத்தியான ரூ. 3 கோடி மதிப்புள்ள பொருள்கள், விற்பனையாகாமல் முடங்கிக் கிடக்கின்றன"

என்று தொழிற்சாலையின் இயக்குநர் திரு. எஸ். எம். பட்டீல், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"இதுவரை அமெரிக்காவில் ரூ. 4 இலட்சம் மதிப்புள்ள இயந்திரங்கள் விற்கப்பட்டுள்ளன. மேலும் விற்க முயற்சி செய்து வருகிருேம்" என்ருர் அவர்.

"இத்தொழிற்சாயில் 300 வகையான கருவிகள் தயாரிக்கப்படுகின்றன" என்றும் அவர் கூறினர்.

சிறைச்சாலையில் வேளாண்மை பண்ணை

பஞ்சாப் அரசு ஆலோசனை

சண்டிகார், ஆக. 7—
சிறைச்சாலையில் பெரிய விவசாய—தொழில்கூடம் அமைக்கும் திட்டம், பஞ்சாப் அரசின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

பஞ்சாப் சிறைகளில் ஏராளமான கைதிகள் இருக்கிருர்கள். அவர்களின் சக்தியை உருப்படியான வழியில் பயன்படுத்த அரசு விரும்புகிறது.

சிறிது காலத்திற்கு முன்பு கைவிடப்படும் நிலையில் இருந்த பிர்லா விதைப் பண்ணையில், விவசாய—தொழில் சிறையை ஏற்படுத்த அரசு விரும்புகிறது.

உலகப் பூகோள மாநாடு

புதுடில்லி. ஆக. 7—
இங்கு அடுத்த ஆண்டு டிசம்பர் 1-ம் நாள் முதல் 8-ம் நாள்வரையில் நடைபெறவிருக்கும் 21-வது உலகப் பூகோள மாநாட்டிற்குப் பல நாடுகளையும் சேர்ந்த சுமார் 1,500 பிரதிநிதிகள் வருவர் என்று தெரிகிறது.

அப்பேரவையின் போது 40 கருத்தரங்குகள் நடைபெறும் 52 கள ஆராய்வுக் கூட்டங்கள் நடக்கும்; நாட்டின் பல்வேறு பகுதிகளுக்குச் செல்லப் பன்னிரண்டு பயணங்கள் ஏற்பாடு செய்யப்படும்.

கடைசியாக இலண்டனில் இப்பேரவை கூடியது; இது நான்காண்டுகளுக்கு ஒருமுறை கூடுகிறது.

இந்தியாவின் மக்கள் தொகை

1967 ஜூலை முதல் நாள், இந்தியாவின் மொத்த மக்கள் தொகை 51,11,30,000 ஆகும்.

சோமாண்டார்குடி

உயர்நிலைப் பள்ளித் திறப்புவிழா

கள்ளக்குறிச்சி வட்டம் சோமாண்டார்குடி உயர்நிலைப் பள்ளித் திறப்பு விழா, 12—7—67 காலை 10 மணியளவில் திரு. எம். தெய்வீகன் பி.ஏ.பி.எல்., எம்.பி. (ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றிப்புத் தலைவர்) தலைமையில் சிறப்புற நடைபெற்றது. எஸ்.பி. பச்சையப்பன் எம். எல். ஏ. (தலைவர், சோமண்டார்குடி ஊராப்சி) அனைவரையும் வரவேற்ருர்.

சென்னை கோட்டக் கல்வி ஆய்வாளர் அனந்தராஜ், பள்ளியைத் திறந்து வைத்தார்.

டி. கேசவலு எம்.எல்.ஏ., நேரு படத்தைத் திறந்து வைத்தார்; பி. வேலாயுதம் காந்தியார் படத்தைத் திறந்துவைத்தார்; மூக்கப்பிள்ளை அண்ணு படத்தைத் திறந்துவைத்தார்; வழக்கறிஞர் சி. ஆறுமுகம் பி.ஏ.பி.எல்., 'வள்ளுவர்' படத்தைத் திறந்து வைத்தார்; கோ. வி- ஆறுமுகம் நன்றி நவின்ருர்.

விராலிமலை உயர்நிலைப்பள்ளி இலக்கிய மன்றம்

விராலிமலை அரசினர்உயர்நிலைப் பள்ளி மாணவர் இலக்கிய மன்றத் தொடக்க விழா, 19—7—67-ல் இலுப்பூர் தலைமையாசிரியர் திரு. ச. சிவாஜி பி.ஏ.பி.டி., தலைமையில் தொடங்கியது.

மன்றச் செயலாளர் ப.நடராசன் தாங்கள் செயற்படுத்தவிருக்கும் திட்டங்களைக் கொண்ட விரிவான அறிக்கையைப் படித்தார்.

பள்ளித் தலைமையாசிரியர் திரு. சீ.இராமச்சந்தின் விழாவிற்கு வந்திருந்தோர் அனைவரையும் வரவேற்ருர்.

குன்றக்குடி அடிகளார், பள்ளி இறுதி வகுப்பு மாணவர்களால் அன்பளிப்பாகத் தரப்பட்ட திருவள்ளுவர் உருவப்படத்தைத் திறந்துவைத்து, 'குறளின் குரல்' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றினர்.

விழாத் தலைவர், 11, 10-ம்வகுப்புகளில் முதன்மை பெற்றுத் தேறிய மாணவி பிச்சைமணி, மாணவர் பெரியசாமி ஆகியோருக்கு முன்னள் அமைச்சர் இராமையா, விராலிமலை ஊராட்சி ஒன்றிப்புத் தலைவர் மீனுட்சிசுந்தரம் ஆகியோரின் பரிசுகளை வழங்கினர்.

தமிழாசிரியர் சி. இராமசாமி நன்றி கூற—நாட்டு வாழ்த்துடன் விழா இனிது முடிவுற்றது.

வீரப்பன்சத்திரம் பேரூராட்சி மன்றம்

சேலம்-தூத்துக்குடி திட்டங்களை வற்புறுத்தித் தீர்மானம்

வீரப்பன்சத்திரம் பேரூராட்சி மன்றத்தின் சாதாரணக் கூட்டம், தலைவர் திரு. எம். இராமசாமி அவர்கள் தலைமையில் 29—7—67 மாலை 8-30 மணிக்கு அலுவலகத்தில் நடைபெற்றது; அதுபோது தமிழ்நாட்டில் தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டத்தையும் சேலம் உருக்காலைத் திட்டத்தையும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துச் செயல்படுத்தும்படி தமிழக அரசு மூலமாக மத்திய அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. சமீபத்தில் சென்னையில் ஏற்பட்ட தீவிபத் [illegible] ல் பாதிக்கப்பட்ட மக்களுக் [illegible] மிழக முதலமைச்சர் [illegible] ணு அவர்களின் [illegible] திக்கு இப்பஞ்சாய [illegible] க ரூ. 5,067 [illegible] க்கப் பட்டது.

மேலவைத் தேர்தலில் க. அறிவழகன்

வேட்பு மனு தாக்கல் செய்தார்

பேராசிரியர் க. அன்பழகன் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதையடுத்து தமிழகச் சட்டமன்ற மேலவையில் காலியான இடத்துக்கு இத்திங்கள் 21-ஆம் நாள் தேர்தல் நடைபெறுகிறது.

ஆசிரியர்கள் தொகுதியான இதில், கழக வேட்பாளராகத் தோழர் க. அறிவழகன் எம்.ஏ. வேட்பு மனு தாக்கல் செய்துள்ளார்.

பேராசிரியர் க. அன்பழகனின் இளவலான தோழர் க. அறிவழகன், வண்ணை சர் தியாகராயர் கல்லூரியில் பொருளாதாரத் துறைப் பேராசிரியராகப் பணியாற்றியவர்; கல்லூரி ஆசிரியர்கள் சங்கச் செயலாளராகவும், பல்கலைக் கழக அகடமிக் கௌன்சில் உறுப்பினராகவும் இருந்து வந்திருக்கிருர்.

சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களில் உள்ள ஆசிரியர்கள் இத்தேர்தலில் வாக்களிக்க வேண்டும்.

இதே தொகுதியில் மற்றும் ஐந்து பேர் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

கா. சு. பிள்ளை நினைவுச் சொற்பொழிவு

குளித்தலையில் கா. சு. பிள்ளை நினைவு இலக்கியச் சொற்பொழிவு, 30—7—67-ல் தலைமை ஆசிரியர் திரு. வெங்கட்கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

திரு. மீ. சு. இளமுருகு பொற்செல்வி அனைவரையும் வரவேற்வேற்ருர். தமிழ் வாழ்த்துடன் நிகழ்ச்சி துவக்கமாயிற்று.

பேராசிரியர் திரு. ஐயன்பெருமாள் கோனுர், 'கவி இன்பம்' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றினர்.

நன்றி கூறல்-நாட்டுவாழ்த்துடன் நிகழ்ச்சிகள் நிறைவெய்தியது.

எண்ணூர் சம்பவம்---

வட்டச் செயலாளர் அனுதாபம்

"2—8—67 அன்று எண்ணூரில் நடைபெறவிருந்த பொதுக்கூட்டத்திற்குச் சென்ற கழகத் தோழர்கள் சானகிராமன், வீரராகவன், மாணவர்கள் முனுசாமி, கோபாலகிருஷ்ணன் ஆகிய நான்கு பேர்களும் படகு விபத்திற்குள்ளாகி இயற்கையெய்திய செய்தியை வேதனையுடனும் ஆழ்ந்த வருத்தத்துடனும் தெரிவித்துக்கொள்வதுடன், அவர்களது குடும்பத்தினருக்குப் பொன்னேரி வட்ட தி. மு. க. சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிருேம்.

"மேலும் எண்ணூரில் இவர்களைத் தண்ணீரிலிருந்து, மூழ்கித் தேடிக் கண்டுபிடித்துக் கொடுத்தும்—கரை சேர்த்தும்—படகு, ஆட்கள் தந்து உதவிய மீனவப் பெருங்குடி மக்களுக்கும், தன்னுயிரைத் துச்சமாகக் கருதிப் பல உயிர்களைக் காப்பாற்றிய மீஞ்சூர் போலீசு சப்-இன்ஸ்பெக்டர்—பொன்னேரி சர்க்கிள் இன்ஸ்பெக்டர்—திருவொற்றியூர் உதவிப் போலீசு சூப்பிரண்டெண்டு—போலீசு சூப்பிரண்டெண்டு ஆகியோருக்கும், வாகன உதவி அளித்த எண்ணூர் மின்சார போர்டு அதிகாரி—எண்ணூர் கிராம அதிகாரி ஆகியோருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும், சவஊர்வலத்தில் கலந்துகொண்ட பெரியோர்—கழகத் தோழர்கள்—அனுதாபிகள் ஆகியோருக்கும் பொன்னேரி வட்டத் தி. மு. க. சார்பில் நன்றியறிதலைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ளுகிருேம்"

என்று, பொன்னேரி வட்ட தி.மு.க. செயலாளர் மு. கேசவன் அறிவி[illegible]கிருர்.

இந்தியைத் திணித்தால் 'தேசீய ஒருமைப்பாடு'தான் முதற்பலி!

நாட்டை நாசவழியில் இட்டுச் செல்ல வேண்டாம்

இந்திரா காந்தியின் 'குழப்ப வாதம்' -- ஓர் இடித்துரை

"இந்தி பேசப்படும் நான்கு மாநிலங்கள் தவிர பிற பகுதிகளில் அந்த மொழியின் செலாவணி மிக மிகக் குறைவு. இந்தி பேசாத மாநிலங்களில், படித்தவர்கள் எல்லோருக்கும் ஆங்கிலம் நன்ருகவோ சுமாராகவோ தெரியும் ; அந்த அளவுக்கு மக்கள் இந்தியை அறிய மாட்டார்கள்—பயன்படுத்துவதுமில்லை !

"இந்தி பேசப்படும் மாநிலங்களிலேயே கூட அது இன்னும் ஆட்சிமொழியாக முழுவடிவம் பெறவில்லை ! அங்கேயேகூட, ஆங்கிலம்தான் இன்னும் இணைமொழியாகப் பயன்பட்டு வருகிறது !

"எவ்வளவோ பிரச்சாரமும் முஸ்தீபுகளும் கெடுபிடிகளும் செய்தும்கூட, இந்தியானது, இந்தியாவின் ஆட்சிமொழி அந்தஸ்தை அடைவது இன்னும் நெடு நாளைக்குச் சாத்தியமல்ல ! எனவே, அது, அனைத்திந்தியாவின ஒரே ஆட்சிமொழியாகவோ, இணை மொழியாகவோ, இன்னும் சில தலைமுறைகளுக்கேனும் வருவது சாத்தியமல்ல !

"இப்பொழுது இருந்துவரும் மொழிக் கட்டுக்கோப்பை உதறி எறிந்துவிட்டு, இந்தியை தேசம் அனைத்தின் மீதும் திணிப்பது சாத்தியமல்ல ! பெரிய பதவிகளில் இருப்பவர்கள், ராஜீய காரணங்களுக்காக சொல்கிருர்கள் என்பதைக் கண்டு, ஆங்கிலம் பயந்து போய் மறைந்துவிடப் போவதில்லை ! இந்தி குதிபோட்டுக் கொண்டு, மக்களின் இணக்கத்துடன் அரியாசனம் ஏறப்போவதுமில்லை !

"அவசரக்கோலமாக இந்தியைத் திணிக்க முயற்சிகள் நடைபெறுமாயின், அதற்குத் தேசிய ஒருமைப்பாடுதான் முதல் பலியாகும் ! நல்லாட்சியின் அடிப்படைகள் அனைத்துமே அதன் விளைவாக கலகலத்துப் போய் தகர்ந்துவிடும் ! நவீன சமுதாயமாக வளர்ச்சி பெறுவதற்கான அறிவியல் உள்பட எல்லாத் துறைகளிலுமே தேசம் வெகு தூரம் பின்னடைந்துவிடும் ! இதைத் தெரிந்தும் தெரியாதவர்கள்போல பெரிய தலைவர்கள் பேசுவது விந்தையாயிருக்கிறது !"

'இணை மொழி' என்ற தலைப்பில் 'தினமணி' (சென்னைப் பதிப்பு) 4–8–67 இதழில் எழுதப்பட்டுள்ள தலையங்கத்தில் இவ்வாறு எச்சரிக்கப்பட்டுள்ளது ; மேலும் அதில் கூறப்பட்டிருப்பதாவது ;—

"எல்லா மொழிகளும் ஏற்றம் காணவேண்டும் என்பதுதான் சர்க்காரின் விருப்பம். ஆனல் எல்லா மாநிலங்களையும் பிணைத்து வைத்திருப்பதற்கு ஒரு 'இணைமொழி' தேவை. அந்த இணைமொழி இந்தியாகத்தான் இருக்க முடியும்" என்று பொருள்பட பிரதம மந்திரி பேசியிருக்கிருர்.

"ஆங்கிலம் அவ்வாறு பணியாற்ற இயலாதா ?" என்று கேட்டதற்கு, "ஆங்கிலத்தில், தம் கருத்துக்களை எடுத்துரைக்கக் கூடியவர்கள் இந்தியாவில் எவ்வளவு பேர் இருக்கிருர்கள் ?" என்று எதிர்க் கேள்வியை அவர் போட்டார்.

பெரிய தலைவர்கள்கூட, சில சமயம் ராஜீய காரணங்களுக்காக பிரச்சினைகளைக் கலந்து குழப்புவதைக் கண்டு வருத்தப்பட வேண்டியிருக்கிறது !

'இணைமொழி' என்ற கருத்தே தெளிவாக விளக்க இயலாதது !

'அகில, இந்திய இணைமொழி' என்று சொல்வதுதான் பொருத்தமானது ! பிரச்சினைகளின் தன்மையைச் சரிவரப் புரிந்து கொண்டுநிலைமையின் தேவைக்கேற்ப மொழித் திட்ட அமைப்பில் மாறுதல்களைச் செய்ய அதுவே துணை புரியவல்லது ! ஆட்சி மொழிதான் இணைமொழியாகச் செயல்படக் கூடியது !

இப்பொழுது அகில, இந்தியப் பணிகள் சம்பந்தப்பட்டவரையில், 'இந்தியாவெங்கும் ஆட்சிமொழியாக இருந்து வருவது ஆங்கிலமே ஒழிய இந்தி அல்ல! எல்லா மாநிலங்களிலும் பிரதான அலுவல்கள். அம்மொழியில்தான் நடைபெற்று வருகின்றன ! காலேஜ் படிப்பும், உயர் தொழில் துறைப் படிப்பும் அதில்தான் பெரும்பாலும் அளிக்கப்படுகின்றன ! வர்த்தக—தொழில் துறைகளிலும் அதுவே பிரதானமாக இருந்து வருகிறது !

ஏதாவது ஒரு மொழியை இன்று இந்தியா வெங்கும் எல்லா மாநிலங்களிலும் பரவலாகப் பல வகைப் பணிகளுக்குப் பயன்படுத்தி வருகிருர்கள் என்ருல், அது, ஆங்கிலம் ஒன்றுதான்! அதுதான் இன்று ஆட்சிமொழியாகவும், இணை மொழியாகவும் ஒருசேரப் பயன்பட்டு வருகிறது! இந்தியின் நிலைமை முற்றிலும் வேறு !

இந்தியின் தகுதி படிப்படியாக வளரட்டும் ; தேசமெங்கும் அது பரந்து மக்களிடையே வேரூன்றட்டும் ; அந்த நிலை ஏற்படுவதற்கு முன்னர், ஆங்கிலத்தின் தகுதி அதற்கு இருப்பதாக நினைத்துக் கொண்டு, முழு மூச்சுடன் அதைத் திணிக்கும் காரியங்களைச் செய்கிறவர்கள் இந்த தேசத்தை நாசவழியில இட்டுச் செல்வதாகத்தான் ஏற்படும் !"

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும். அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

பஞ்சப் படி உயர்வினை

பத்திரமாகக் கொடுப்பதா -- அரசு ஊழியர்கள் எதிர்ப்பு

புதுடில்லி, ஆக. 7—

பஞ்சப் படி உயர்வினை சேமிப்புப் பத்திரங்களாகக் கொடுக்க அரசு முடிவு செய்திருப்பதை அரசு ஊழியர்களின் தலைவர்கள் ஏற்க விரும்பவில்லை ; ஏனெனில், 'பஞ்சப் படி உயரும் ; பழைய பாக்கி, சிறிது கணிசமான தொகையாகக் கிடைக்கும்' என்று நம்பி, கடனை வாங்கி வைத்திருந்தார்கள் அரசு ஊழியர்கள். இந்நிலையில், 'பஞ்சப் படி உயர்வு பணமாகக் கிடைக்காது — பத்திரங்களாகக் கிடைக்கும்' என்று சொன்னல், அரசு ஊழியர்கள் பெரிதும் ஏமாற்றம் அடையத்தான் செய்வார்கள்.

இனி அடுத்துவரும் மாதங்களைப் பொறுத்தமட்டில் கூடுதல் பஞ்சப் படி தொடர்பாக ஒரு சமரச ஏற்பாடு காண அரசு ஊழியர்கள் விரும்புகிருர்கள். பஞ்சப் படியில் ஒரு பகுதியை அடிப்படைச் சம்பளத்தில் இணைத்துவிடுதல் ; மற்ற பாதியை, பத்திரங்களாக தருதல்—என்பதே சமரச ஏற்பாடு. இவ்வித சமரச ஏற்பாட்டினை ஏற்றுக் கொள்வதைத் தவிர, மத்திய அரசுக்கு வேறு வழியில்லை என்று கருதப்படுகிறது.

இடமாற்றமா ? மனமாற்றமா ?

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கடைபிடிக்கப்பட்டால், இடம் மாற்றவேண்டிய அவசியம் கிடையாது. ஆனல், அமைச்சரவையின் ஆயுட்காலம் போகாமலிருக்க இந்த முறையிலும் எவ்வித வழியும் இல்லை!

எந்த வகையில் பார்த்தாலும், இயற்கையில் மனம் மாறும் உறுப்பினர்கள் இடம் மாறுவதைச் சட்டத்தினுல் தடுத்தாலும், அதனுல் அமைச்சரவை காப்பாற்றப்படும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை !

எனவே, இடம் மாறும் உறுப்பினர்கள் எண்ணிக்கையில் அதிகமாகும்போது, மறுதேர்தல் நடத்தியே ஆகவேண்டும் என்ற யோசனை மத்தியப் பிரதேசத்துக்கோ,அல்லது மற்ற மாநிலங்களுக்கோ என்றும்--- எந்த நிலையிலும் ஒத்துவரக் கூடிய ஒன்ருக இருக்க முடியாது !

ஒரு நாள் கூத்துக்காக மீசையையே எடுக்கத் துணிவது போல், மத்தியப்பிரதேசத்துக்காக மட்டும் 'மறு தேர்தல்' என்ற யோசனையைச் சட்ட வடிவமாக்குவது, பின்னர் மறு தேர்தல் தேவைப்படும் போதெல்லாம் கட்சி மாறும் வழக்கத்துக்கு வழிவகுத்துவிட ஏதுவாகிறது !

சட்டமன்றங்களில் கட்சி மாறுவதை விரச நிலைக்குக் கொண்டு போகாமல் காப்பது கட்சித் தலைமையின் சாமர்த்தியத்தையும், நேர்மையையும் பொறுத்தது ! உறுப்பினர்களின் அரசியல் நாகரிகம், கொள்கைப் பிடிப்பு ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்டது !

இந்த இரண்டும் சரியாக அமையாத நிலையில், இடம் மாறும் பிரச்சினைக்கு எவ்வித முற்றுப் புள்ளியும் வைக்க முடியாது !

—எஸ். ஆர்.

விடுதலைசெய்ய மறுப்பு

புதுடில்லி, ஆக. 7—

"பொதுநலனை முன்னிட்டு ஷேக் அப்துல்லாவை, காவலிலிருந்து இ[illegible] ...டுதலை செய்வதி[illegible] ...ரசு முடிவுக்கு வா[illegible]

என்[illegible] ...ற மேலவையி[illegible] ...ச்சர் சவான் கூ[illegible]

திருச்சி மாவட்டத்தில் அமைச்சர்கள்

நிகழ்ச்சிகள்

அறிஞர் அண்ணு

ஆகஸ்டு

8 : ஜமால் முகம்மது கல்லூரி; அரியமங்கலம் சிறப்பு அங்காடி கால்கோள் விழா ; தில்லைநகர் பொதுக்கூட்டம் ;

9 : காலை : கீரனூர்—திருமணம் ; மாலை : தபால்—தந்தி சிப்பந்திகள் சங்கக் கட்டிட கால்கோள் விழா ; முத்தழகப்பட்டி வளைவு திறப்பு விழா ; புத்தாநத்தம் பொதுக்கூட்டம் ;

10 : பாப்புலர் ஆட்டோ மொபைல்ஸ் நிதியளிப்பு விழா ; குமரபாடி பொதுக்கூட்டம்.

இரா. நெடுஞ்செழியன்

ஆகஸ்டு

9 : மாலை : திருப்பராயத்துறை இராமகிருஷ்ணகுடில் பார்வை ; இரவு : வேலாயுதம்பாளையம் பொதுக்கூட்டம்.

10 : மாலை : கூத்தப்பாடி சிறுவர் அரங்கத் திறப்பு விழா ; திருவரம்பூர் ஊராட்சி ஒன்றிப்பு வரவேற்பு ; பொதுக்கூட்டம்.

மு. கருணுநிதி

ஆகஸ்டு

8 : முசிறி பொதுக்கூட்டம்.

கே. ஏ. மதியழகன்

ஆகஸ்டு

8 : விராலிமலை பொதுக்கூட்டம் ;

9 : செயங்கொண்டம் பொதுக் கூட்டம் ;

10 : மேலக்கற்கண்டார்கோட்டை பொதுக்கூட்டம்.

ஏ. கோவிந்தசாமி

ஆகஸ்டு

8 : எணச்சநல்லூர் பொதுக்கூட்டம் ;

9 : செந்துரை பொதுக்கூட்டம் ;

10 : குளித்தலை பொதுக்கூட்டம்.

செ. மாதவன்

ஆகஸ்டு

8 : மாலை : அரியமங்கலம் சிறப்பு அங்காடி கால்கோள் விழா ; புதுக்கோட்டை பொதுக்கூட்டம் ;

9 : கள்ளக்குடி பொதுக்கூட்டம் ;

10 : மாலை : ஜோசப் கல்லூரி ; இரவு : பெரம்பலூர் பொதுக் கூட்டம்.

சத்தியவாணிமுத்து

ஆகஸ்டு

8 : பொருட்காட்சி — நடனம் - தலைமை ; லால்குடி பொதுக் கூட்டம் ;

10 : பொன்மலை — மேலக்கற்கண்டார் கோட்டை பொதுக்கூட்டம்.

சாதிக் பாட்சா

ஆகஸ்டு

8 : லால்குடி பொதுக்கூட்டம் ;

9 : லப்பைக் குடிக்காடு ;

10 : திருச்சி பொதுக்கூட்டம்.

எம். முத்துச்சாமி

ஆகஸ்டு

8 : சீரங்கம் பொதுக்கூட்டம் ;

10 : ஆலங்குடி பொதுக்கூடடம்.

கலை நிகழ்ச்சி

சென்னை 88-வது வட்டம் எம். ஜி. ஆர். பகுத்தறிவு மன்றச் சார்பில், ஆழ்வார்பேட்டை தெருவில் 9—8—67 இரவு 7 மணிக்கு க. நடேசன் தலைமையில் சுந்தரம் குழுவினரால், 'நடந்ததும்—நடப்பதும்' என்னும் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

புதுடில்லி, ஆக. 7—

பஞ்சப்படி பற்றிய பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால் செப்டம்பர் 11-ம் நாள் முதல் வேலை நிறுத்தம் செய்வதென்று மத்திய அரசு ஊழியர்கள் சங்கங்களின கூட்டுச் செயற்குழு தீர்மானித்துள்ளது.

Madras State Electricity Board

Ennore Thermal Scheme

WANTED WELDERS

High Pressure Arc and Gas welders having the following minimum qualifications are required for Ennore Thermal Scheme.

1. AGE : 25 to 40 years as on 1—8—'67.

2 QUALIFICATIONS :

1. Academic :— Passed IIIrd Form.

2 Technical :—(a) Passed I T I. Trade Test in welding Technology or any other equivalent test from other recognised institutions or organisations.

(b) Should possess current certificate authorising welding or Low carbon steel and alloy steel tubes, issued by the Chief Inspector of Steam Boilers of any State in India having passed all the Tests prescribed in the Indian Boiler Regulations,1950 Preference will be given to those having certificate in Radiographic Examination of welds.

3. EXPERIENCE : Should have worked at least two years in Steam Power Stations on jobs involving low carbon steel and/or alloy steel.

4. PAY : Rs 12/- (Rupees Twelve) (Maximum) per day depending upon qualifications and experience.

No travelling allowances will be paid for interview The last date for receipt of applications with full details as above and with true copies of certificates etc by the undersigned is on 19—8—'67.

Any further details may be obtained from the undersigned in person.

G. THIRUNAVUKKARASU
Special Construction Engineer
Ennore Thermal Scheme

Ennore,
Madras-57
Dated : 28-7-'67.

நடக்க இருப்பவை

பொதுக் கூட்டங்கள்

8--8--67

அரும்பாவூர்

தி.மு.க. சார்பில் இரவு 7-30 மணிக்கு ; தலைவர் : ஏ. எம். இராமசாமி ; பேசுவோர் : அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, ஜே. எஸ். இராசு எம்.எல்.ஏ., எம். மாரிமுத்து எம்.எல்.ஏ., பி. எஸ். அம்பாயிரம் செல்ல கருப்பண்ணன், ந. உலகநாதன், மு. துரைசாமி, பொ. தங்கவேல், ஏ. எஸ். அத்தியப்பன், பரமசிவம், பெ. சீனிவாசன், மு. கணபதி, மற்றும் பலர்.

9--8--67

சென்னை 4-வது வட்டம்

கே. எஸ். பாண்டியன் நினைவு மன்ற 11-வது ஆண்டு நிறைவு விழா ; இரவு 7-மணிக்கு சஞ்சீவிராயன் கோயில் தெருவில் ; தலைவர் : வி. பி. சாரதி ; பேசுவோர் : அமைச்சர் மு. கருணநிதி, க. அறிவழகன் எம்.ஏ., அமுதாராகவன் மற்றும் பலர்.

கல்லக்குடி

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு அண்ணு படிப்பகத் திடலில் ; தலைவர் : அ. பிச்சை ; பேசுவோர் : அமைச்சர் செ. மாதவன், அன்பில் தருமலிங்கம், மு.க.து. நடராசன் எம்.எல்.ஏ., அ. தம்புசாமி, மற்றும் பலர்.